தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002
வளன் ஆயம்
தொழிதோறும் புதுமைசேர்

# வ.உ.சிதம்பரம்பிள்ளை காத்த சுதந்திரம்

**அ.ஞா.உமாமகேஸ்வரி**, முனைவர்பட்ட ஆய்வாளர், தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-02.

**ஆய்வுச் சுருக்கம்:**

தூத்துக்குடியின் முத்து வ.உ.சிதம்பரம்பிள்ளை “மக்கள் பணியை அறப்பணியாய் ஆற்றியவர்”. தம் நாட்டுப்பணிகள் மூலமும், பேச்சாற்றல் மூலமும், எழுத்தாற்றல் மூலமும், சுதந்திரத்தை மக்கள் மனதில் விதைத்தவர். பாரதியின் பாடலின் மீதான ஆர்வமும், மக்கள் மீதான அன்பும் இவரைப் பல சுதந்திரப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறைக்கும் செல்ல வைத்தது. விடுதலைக்காக வ.உ.சி அடைந்திட்டத் துன்பங்கள் எண்ணிப் பார்க்க இயலாதவை. சிறப்புமிக்க விடுதலைப் போராட்ட வீரரான வ.உ.சியின் சுதேச, சுதந்திரப்பணிகளை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்

**திறவுசொற்கள்**

பெரிய தந்தை , கடப்பாடு, செப்புதல், நல்லறம், வாளாண்மை, மெய்யறிவு, விவேகபானு, தேசாபிமானி, நாவாய், சுதேசி

## முன்னுரை

இந்திய விடுதலைப் போரிலே வெள்ளையராட்சியை எதிர்த்தும், தமிழர்களைக் கொள்ளையடிக்கும் பொருளாதாரச் சுரண்டலைத் தடுத்தும் நிறுத்திட இந்தியாவின் சார்பாகக் கப்பலோட்டிய முதல் வீரத் திருமகன் தமிழின் பெருமகனார் வ.உ.சிதம்பரம் பிள்ளைதான் என்று இன்றும் உலக வரலாறு வரம்பிட்டு வாழ்த்திக்கொண்டு இருக்கின்றது. வ.உ.சி. என்றழைக்கப்படும் வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம் பிள்ளை (செப்டம்பர் 5-1872 பிறப்பு :நவம்பர் 18-1936 இறப்பு) ஒரு இந்திய விடுதலைப் போராட்ட வீரர். பிரித்தானியக் கப்பல்களுக்குப் போட்டியாக முதல் உள்நாட்டு இந்திய

கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர். வ.உ.சி தொடங்கிய சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனம் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே கடல்வழிப் போக்குவரத்தை மேற்கொண்டது. பிரித்தானிய அரசால் தேசத் துரோகியாகக் குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டதோடு வழக்கறிஞர் உரிமமும் பறிக்கப்பட்டது.

**பன்முக கோணங்களில் வ.உ.சி**

வ.உ.சிதம்பரம்பிள்ளை தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்தார். வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற் சங்கத் தலைவர், சுதந்திரப் போராட்ட வீரர். எனும் பன்முகத் தன்மை பெற்றிருந்தார். இவரது அரசியல் வாழ்க்கை உயர்ந்த ஒழுக்கமும் நேர்மையும் ஆற்றலும் நிறைந்ததாக இருந்தது. அன்பு, தைரியம், வெளிப்படையான குணம் இவற்றை உடையவராக இருந்தார்.

வங்காளத்தில் விபின் சந்திரபாலும், பஞ்சாபில் லாலாலஜபதிராயும், மராத்தியத்தில் பாலகங்காதர திலகரும் விடுதலைப் போராட்டத் தளபதிகளாக விளங்கியபோது தமிழ்நாட்டில் வ.உ.சிதம்பரனார் போராட்டத் தளபதியாகத் திகழ்ந்தார். வ.உ.சியின் சுதந்திரப் போராட்ட வாழ்க்கையின் பக்கங்களை இக்கட்டுரை ஆராய்கிறது.

**வ.உ.சிதம்பரம்பிள்ளை**

பாண்டிநாட்டுச் சீமையில் 'திக்கெலாம் புகழும்' திருநெல்வெலி மாவட்டத்தில் ஒட்டப்பிடாரம் என்னும் சிற்றூரின் உலகநாத பிள்ளை-பரமாயி அம்மையாருக்கு மகனாகப் பிறந்தார். வழக்கறிஞர்; தொழில் புரிந்து வந்த வ.உ.சி.யின் தந்தை உலகநாதனின் மூத்த சகோதரர் சிதம்பரம் தன்னுடைய 28வது அகவையில் மறைந்துவிட்டார். அவரின் நினைவாக தனக்குச் சிதம்பரம் என பெயர் சூட்டப்பட்டது என்பதை வ.உ.சி. அவர்களே தன்சுயசரிதையில் பின் வரும் கவி மூலம் பாடியுள்ளார்.

"சின்னாள் முன்னர்த் திருக் குற்றாலம்

மன்னிய என்பிதா மகிழ்வொ ருவந்துயான்

பிறக்கு முன்னரென் பெரியதந்தையை

இறக்கக் கொடுத்ததால் இடர்க்கடலாழ்ந்தவென்

பாட்டனும் பாட்டியும் பட்ட துயரினை

ஓட்டிடக் கருதி “உன் மகன் பெரும் புகழ்

பதம்பெற மீண்டும் பாரினிற் பிறந்துளன்

சிதம்பரம் என்று செப்பிடும்” என்ன

மேலோன் பெயரால் விளம்பினர் என்னை”

சிதம்பரம் தன் தொடக்கக் கல்வியை ஒட்டப்பிடாரம் திண்ணைப் பள்ளியில் பயின்றார். உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வியினைத் தூத்துக்குடியில் உள்ள புனித சேவியர் பள்ளியிலும், கால்டுவெல் பள்ளியிலும் முடித்தார். பள்ளிப்படிப்பை முடித்த பின்னர் சட்டக்கல்வியை திருச்சியில் நிறைவு செய்தார்.

**இளமையும் இல்லறமும்**

ஒட்டப்பிடாரத்தில் வழக்குரைஞர் பணியைத் தொடர்ந்த வ.உ.சி. நீதியை நிலைநாட்டும் வண்ணம் தனது வழக்குரைஞர் பணியைச் செவ்வனே செய்துவந்தார்.

குற்றவியல் துறையில் சிறந்த வழக்குறைஞர் என்ற பெயரை வெகுவிரைவில் பெற்றார். காவல் துறையினர் தொடுத்த தவறான வழக்குகளால் பாதிக்கப்பட்ட ஏழைகளுக்குக் கட்டணமின்றி வாதாடினார். மேலும், ‘கப்பலோட்டிய தமிழன்’ என்றும் ‘செக்கிழுத்த செம்மல்’ என்றும் தமிழ் மக்களால் போற்றப்படுகின்றார். திருமணவாழ்வில் வ.உ.சி.யின் முதல் மனைவி வள்ளியம்மாளை இழந்தபின்னர் ஆழ்வார் திருநகரி சி.வா.பாப்புபிள்ளையின் மகள் மீனாட்சி அம்மாளை 8.9.1901-இல் மறுமணம் செய்து கொண்டார். “இல்வாழ்வு என்பது குடும்பத்துடன் வாழும் வாழ்க்கையாகும். இல்லறத்தை நல்லறமாக நடத்துவதே இல்லறத்தின் கடமையாகும். விவசாயம் செய்வதும் இல்லறம் ஆகும். இல்வாழ்க்கையின் மிகப்பெரிய வடிவமே அரசு ஆகும். அறம், பொருள், இன்பம், வீடுபேறு இவைகளை அடைவதே” என்று இல்வாழ்க்கையின் பெருமை குறித்து வ.உ.சி கூறியது இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

**தமிழ்ப் பணி**

நாட்டு விடுலைக்காகப் போராடிய விடுதலை வீரர்கள் பலரும் தமிழ் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டுள்ளனர் என்பது வரலாற்றில் அறியப்படுகிறது. அத்தகைய தலைவர்களுள் வ.உ.சியும் குறிப்பிடத்தக்க ஒருவராவார்.

“ வேளாளன் சிறை புகுந்தான் தமிழகத்தார்

மன்னனென மீண்டான் என்றே

கேளாத கதை விரைவிற்கேட்பாய் நீ

வருந்தலை என் கேண்மைக்கோவே!

தாளாண்மை சிறிதுகொலோயாம் புரிவோம்

நீ இறைக்குத் தவங்கள் ஆற்றி வாளாண்மை

நின்துணைவர் பெறுகெனவே

வாழ்த்துதிநீ வாழ்தி! வாழ்தி!” -பாரதியார் கவிதைகள்

என்று பாரதியார் வ.உ.சியின் தொண்டு குறித்துப் பாடியுள்ளார்.

ஆயினுங்கூட அவராற்றிய செந்தமிழ்ப் பணிகள் நம் சிந்தை குடிகொள்ளத்தக்க சீரிய பணிகளேயாம் என்பது பின்வரும் சான்றுகளால் விளங்கும். வ.உ.சி. பிறந்த திருநெல்வேலிச் சீமை இயல்பாகவே நாட்டுப் பற்றிற்கும் மொழிப்பற்றிற்கும் பிறப்பிடமாக விளங்குகின்ற சிறப்புடையது. அத்தகைய சிறப்புமிக்க ஊரில் பிறந்த வ.உ.சி. அவர்கள் தமிழ் மொழியினை விருப்பத்தோடும், ஆழ்ந்து, கற்றறிந்தார். அரசியல் வாழ்க்கையில் அவர் பெற்ற சிறைவாசத்தின் போது செந்தமிழ்ப் பணியில் தலைப்படலானார்.

அவரின் செந்தமிழ்ப் பணிகளை நான்கு வகையாகக் கூறலாம்.

- மொழிபெயர்ப்புப் பணி
- படைப்பிலக்கியப் பணி

- உரையாசிரியப் பணி
- பதிப்பாசிரியப் பணி

எனத் தமிழிற்கு இவர் ஆற்றிய பணி அளப்பரியது எனலாம்.

**வ.உ.சி.யின் அறநெறி**

நமது நாட்டின் சமய அறிவையும் வாழ்வியல் நெறிகளையும் மக்கள் சரியாகப் பின்பற்றவில்லை. அவர்களது அரைகுறையான சமய ஞானத்தால் இந்திய நாடு வீழ்ச்சி அடைந்தது. எல்லாம் விதியின் வழியே நடக்கும் என்ற கொள்கைக்குத் தவறான பொருள் கொண்டுவிட்டார்கள். இத்தகைய பிற்போக்கான மனநிலையை மாற்றும் வகையில் வ.உ.சி. மெய்யறிவு மற்றம் அகமே புறம் ஆகிய நூல்களை படைத்துள்ளார்.

சிதம்பரம் பிள்ளை தனது 'மெய்யறிவு' என்னும் நூலில் அன்னாரின் கண்டறியேன் என்பதற்கு பேதையரைக் காண் என்று கூறுகின்றார். அறநெறிகளைப் போற்றாத கடைபிடிக்காத மக்கள் என்றும் உயர்வு பெற முடியாது என்பது பிள்ளையின் சித்தாந்தம் ஆகும். இதை அவர் 'அகமே புறம்' என்ற நூலில்

"அறத்தை அறிய அறிவே மறமாம்

அறத்தைப் பிழைத்த அறிவே மிருகம்

அறத்தைப் புரியும் அறிவே மனிதன்

அறத்தைக் காக்கும் அறிவே கடவுள்".

என்று சிதம்பரம் பிள்ளை அறம் என்ற தத்துவத்தின் மூலம் மிருகத்தன்மை, வீரத்தன்மை, மனிதத்தன்மை, தெய்வத்தன்மை, ஆகியவற்றை அற்புதமாக தெளிவுப்படுத்திக் கூறுகிறார்.

**ஆன்மீகப் பணி**

வ.உ.சி. ஆன்மீகச் சிந்தனையில் அதிக நாட்டம் கொண்டிருந்தார். "தனிமனித ஒழுக்கத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர் வ.உ.சி. தனிமனித வாழ்க்கை நெறிப்படும்போது சமுதாயம் மேம்படும்" என்ற நம்பிக்கை கொண்டவர். இவர் தனது நண்பர்களுடன் இணைந்து 1900 ஆம் ஆண்டு 'விவேகபானு' என்னும் ஆன்மீக இதழை

உருவாக்கினார். இவ்விதழின் வாயிலாக ஆன்மீகம் மற்றும் இலக்கியம் குறித்த தமது படைப்புகளை பதிவுசெய்தார். இதுமட்டுமின்றி தூத்துக்குடியில் உள்ள சைவசித்தார்ந்த சபையில் இணைந்து செயல்பட்டு வந்தார்.

**பதிப்புப் பணி**

வ.உ.சி.யின் செந்தமிழ்ப் பணியினை இலக்கியப் பணி, இலக்கணப் பணி, என இருபெரும் பிரிவுகளில் பகுக்கலாம். வ.உ.சி.யின் இலக்கணப் பணி பெரிதும் பதிப்புப் பணியாய் அமைந்த திறம் போற்றுதற்குரியது. “சுவடிகளில் பொதிந்து கிடந்த தமிழ்ச் செல்வங்களைப் பெருமை அறியாப் பொது மக்களிடமிருந்தும் செல்வத்துக்கும் அந்தஸ்துக்கும் இரையாகியும் ஆடிப்பெருக்கில் இரையாகியும் அழிந்த அவலக் கொடுமைகளிலிருந்ததும் காத்து அச்சேற்றும் பதிப்புப்பணி தமிழ் வளர்ச்சிக்கான ஆதாரப் பணியாக அமைந்தது” என்கிறார் அறிஞர் ஒருவர். இத்துறையில் சி.வை.தாமோதரன் பிள்ளை டாக்டர் உ.வே.சாமிநாதையர் போன்ற பதிப்பாளர் வரிசையில் சிதம்பரனாரையும் இணைத்து வைத்துப் போற்றும் மரபு உண்டு. இவர்

1. தொல்காப்பியம்-எழுத்து (இளம்பூரணர் உரை)
2. தொல்காப்பியம்-சொல் (இளம்பூரணர் உரை)
3. சிவஞானம் போதம்

போன்ற நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

**தேசத்தைக் காத்த தியாகம்**

வ.உ.சிதம்பரம்பிள்ளை அவர்கள் தன்னுடைய இயற்பெயரோடு தேசத்தின் தேசியகீதத்தை இணைத்து “வந்தே மாதரம் சிதம்பரம் பிள்ளை” என்று தனது பெயரை மாற்றிக்கொண்டது இவரது தேசபக்தியைக் காட்டுகிறது. செல்வச் செழிப்பு மிகக் குடும்பத்தில் பிறந்த இவர் ஆடம்பரமாக வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவரோ மக்களுக்காக வெள்ளையர்களுக்கு எதிராகப் போராடி சிறை சென்று தன்னையே நாட்டுக்காக அர்ப்பணித்தார்.

**தொழிலாளர்கள் நலம் காத்தவர்**

தூத்துக்குடி “கோரல் மில்” என்ற தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்குக் கூலி மிகக் குறைவு. ஆனால் அவர்கள் நாள் முழுவதும் இடைவேளை இல்லாமல் பன்னிரண்டு மணி நேரத்திற்கு அதிகமாகக் கடினமாக உழைக்க வேண்டும். விடுமுறையும் கிடையாது. தொழிலாளர்கள் செய்த சிறு தவறுகளுக்கும் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். தொழிலாளர்களின் இந்த நிலையைக் கண்டு பொங்கிய வ.உ.சி. தொழிலாளர்களை வேலைநிறுத்தம் செய்யும் படி தூண்டினார்.

வ.உ.சி.யின் பேச்சால் கவரப்பட்ட தொழிலாளார்கள் அவர் தலைமையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்தச் சமயத்தில் வ.உ.சி. தொழிலாளர்களுக்கு பொதுமக்களின் துணையுடனும் தமது சொந்த சொத்துகளின் மூலமாகவும் உதவினார். வேலை நிறுத்தம் மேலும் மேலும் தீவிரமடைந்ததால் நிர்வாகம் கூலியை உயர்த்தவும் வேலை நேரத்தைக் குறைக்கவும் ஒத்துக்கொண்டது. வ.உ.சி. தொழிலாளர்கள் நலனுக்காகப் பாடுபட்ட முன்னோடியாகத் திகழ்ந்தார்.

**இந்திய தேசிய காங்கிரஸில் வ.உ.சி.**

இந்தியாவின் மிகப்பெரிய அரசியல் கட்சிகளில் ஒன்றான இந்திய தேசிய காங்கிரசு 1885ல் தொடங்கப்பட்ட இக்கட்சி இந்திய விடுதலை இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றது.

இந்தியாவில் சுதேசி இயக்கம் தலைதூக்கிய அந்த நேரத்தில் லாலாலஜபதிராய் பாலகங்காதர திலகர் போன்ற பலரும் ஆங்கிலேய வர்த்தக வற்புறுத்தலுக்கு முற்றுப் புள்ளி வைக்க முயற்சி செய்துவந்தனர். அதே காரணத்திற்காகவும் இந்திய பாரம்பரிய கைத்தொழில்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையிலும் அரவிந்தோகோஷ், சுப்பிரமணிய சிவா சுப்பிரமணிய பாரதி ஆகியோர் சென்னை மாகாணத்தில் இருந்து போராடினர். இதுதான் வ.உ.சி.யை இந்திய காங்கிரஸ் கட்சியில் சேரவும் சென்னை மாகாண உறுப்பினர்களுடன் இணைந்து போராடவும் தூண்டியது. அதன்பிறகு இந்திய தேசிய காங்கிரஸின் சேலம் மாவட்டம் அமர்விற்குத் தலைமை தாங்கினார்.

**பாரதியார் நட்பு**

வ.உ.சி.யும் பாரதியாரும் அருகருகே உள்ள கிராமத்தைச் சேர்ந்தவர்கள் இருவரின் தந்தையரும் நண்பர்கள் என்பதால் இருவரும் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. வ.உ.சி. அப்போதெல்லாம் அவர்கள் நாட்டின் விடுதலை பற்றியே பேசி வந்தனர். தனது உணர்ச்சி மிக்க பாடல்களால் நாட்டு மக்களிடையே விடுதலை உணர்வைத் தட்டி எழுப்பும் பாரதியாரின் பாடல்கள் வ.உ.சி.க்கு மிகவும் பிடித்தமானவை.

**நன்றி மறவாத பண்பு**

வ.உ.சி. சிறை சென்றதால் வழக்கறிஞர் பணி செய்வதற்கான உரிமையை இழந்தார். அதனால் அவரால் பணியாற்ற இயலாத நிலையில் ஈ.எச். வாலஸ் என்பவர்தான் வ.உ.சி.யின் நேர்மையும் திறமையும் புரிந்து அவர் வழக்கறிஞர் பணியைத் தொடர அனுமதி அளித்தார். இதற்கு நன்றி தெரிவிப்பதற்காகவே வ.உ.சி. தனது கடைசி மகனுக்கு "வாலேஸ்வரன்" என்று பெயரிட்டார்.

**சுதேசிக்கப்பல்**

ஆங்கிலேய அரசாங்கம் மற்றும் ஆங்கிலேய வியாபாரிகளின் கோபத்தைத் தாண்டியும் வ.உ.சி. கப்பல்கள் தூத்துக்குடி – கொழும்பு இடையில் வழக்கமான சேவையைத் தொடங்கியது. சுதேசி நிறுவனம் ஆங்கிலேய கப்பல் நிறுவனத்திற்குக் கடும் போட்டியாக உருவெடுத்தது.

ஆங்கிலேயர்கள் போட்டியைச் சமாளிக்க முடியாமல் சுதேசிக்கப்பல் கட்டணத்தைவிட குறைவாக அறிவித்தனர். அதற்குப் பதிலடி கொடுக்க வ.உ.சி.யும் தனது கட்டணத்தை மேலும் குறைத்தார். கடைசியில் ஆங்கிலேய கப்பல் கம்பெனி பயணிகளை இலவசமாக அழைத்துச் செல்வதாகக் கூறி கூடுதலாகப் பயணிகளுக்குக் குடைகளைப் பரிசாக வழங்கியது. வ.உ.சி.யால் இலவசமாக வழங்கமுடியாததால் சுதேசிக்கப்பல் நிறுவனம் திவாலாகும் நிலைக்குச் சென்றுவிட்டது.

**மகத்தான மனிதன் கப்பலோட்டியத் தமிழன்**

இந்திய தேசம் ஆங்கிலேயர்களின் பிடியில் இருந்து விடுபட வேண்டும் தமது மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காகத் தனது வாழ்வையே இவர் அர்ப்பணித்தார்.

அங்கிலேயர்களுக்கு சவால் விடும் விதமாக ஐரோப்பாவிற்குச் சென்று அங்கிருந்து இரண்டு பெரிய கப்பல்களைத் தனது சொத்து அனைத்தையும் விற்று இவர் வாங்கினார். இதனால்தான் இவர் " கப்பலோட்டியத் தமிழன் " என அழைக்கப்படலானார்.லாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட பங்குதாரர்கள் சுதேசிக் கப்பல் கம்பெனியின் காரியதரிசி பதவியிலிருந்து விலகிவிடுங்கள் என்று வ.உ.சி.யை வற்புறுத்தினார்கள். தான் கண்போல காத்து வந்த சுதேசிக் கப்பல் கம்பெனியின் காரியதரிசி பதவியிலிருந்து விலகி முழுமூச்சாக அரசியலில் தீவிரமாக ஈடுபடலானார்.

திருநெல்வேலியில் 1908ஆம் ஆண்டு 'தேசாபிமான சங்கம்' நிறுவப்பட்டது. சுதந்திதரப் போராட்டத்தை ஆதரித்தும் பொது மக்கள் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் எனவும் பொதுக் கூட்டங்கள் மூலம் சிதம்பரனாரும் சுப்ரமணிய சிவாவும் தீவிர பிரச்சாரம் செய்தனர்.

"ஆளப்பிறந்த மக்கள் அடிமைகளாக வாழ்வதா? பண்டம் விற்க

வந்த வணிகக் கூட்டம் பாரத நாட்டை ஆள்வதென்றால்

அதை நாம் பார்த்திருப்பதா? முப்பது கோடி மக்களை

ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வந்த ஐந்து லட்சம்

வெள்ளையர்கள் ஆள்வதென்றால் இதைவிட அவமானம்

வேறென்ன இருக்க முடியும்?"

என்று அனல் தெறிக்க உரை நிகழ்த்திப் பொதுமக்களிடம் சுதந்திர உணர்வை ஊட்டினார் வ.உ.சிதம்பரம் பிள்ளை.

இனியும் அடக்கு முறைகளால் ஆள்வது ஆகாத காரியம் என்று ஆங்கிலேய அரசின் மாவட்ட ஆட்சியர் விஞ்சு துரைக்குச் சிதம்பரனார் பதிலடி கொடுத்தார். அதனால் கோபம் அடைந்த ஆங்கில ஆட்சியர் வ.உ.சி.யை அடிமை சாசனம் எழுதிக் கொடுக்க கூறவே சிதம்பரனார் முன்வராமல் தம்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் எனத் துணிச்சலாக அறிவித்தார். உடனே மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் சிதம்பரனாரும் சுப்பிரமணிய சிவாவும் கைது செய்யப்பட்டனர். பின்பு அவர் தனது தண்டனைக்

காலத்தைக் கோயம்புத்தூர் கண்ணனூர் சிறைச்சாலைகளில் கழித்தார். புழு பூச்சிகளும் கல்லும் மண்ணும் கலந்திருந்த மோசமான உணவும் கேழ்வரகுக் கூழும் சிதம்பரனாருக்குக் கொடுத்தனர்.

சிறையில் இருக்கும்போதே சுதேசிய கப்பல் கம்பெனியின் பங்குதாரர்களே நஷ்டம் குறித்து நேட்டீஸ் அனுப்பினர். வ.உ.சி.பங்குதாரர்களுக்கு வரும் லாபத்திலும் நட்டத்திலும் பங்கு உண்டு என்று வலியுறுத்தி அதே சமயம் சிறையிலிருந்து வந்தபிறகு நஷ்டத்தை ஈடுசெய்வதாகக் கூறினார். இறுதியாக எந்த ஆங்கிலேயர்களை எதிர்த்துக் கப்பல் விடப் பட்டதோ அந்த ஆங்கிலேயே கம்பெனியிடமே சுதேசிக் கப்பலை விற்றுவிட்டார்கள். அச்சமயம் வ.உ.சி. 'சுதேசி நாவாய் புலம்பல்' என்று ஒரு வெண்பா எழுதியுள்ளார்.

"என் மனமும் என்னுடம்பும் என்சுகமும் என்னறமும்

என் மனையும் என மகவும் என் பொருளும்-என் மனமுங்

குன்றிடினும் யான குன்றேன் கூற்றுவனே வந்திடினும்

வென்றிடுவேன் காலால் மிதித்து".

**செக்கிழுத்தச் செம்மல்**

சிறையில் மாடுகள்; இழுக்கும் செக்கினை இழுத்து மாடாகவே உழைத்தார். விளைவு அவரது எடை மி;கவும் குறைந்தது. இவரது நிலைமையைக் கண்டு வருந்திய சிறை இயக்குநர் இவரது நிலைமையைக் கண்டு வருந்திய சிறை இயக்குநர் சிறை அலுவலராகப் பணியேற்றுக் கொண்டால் தண்டனைக் காலம் குறையும் என்றும் இன்னும் பல நன்மைகள் கிட்டும் என்றும் வ.உ.சி.யிடம் கூறியபோதும்கூட நாட்டுப்பற்றால் அந்தப் பதவியை மறுத்துவிட்டார். அதேசமயம் வ.உ.சி. சிறையிலிருந்த போது சுதேசி கப்பல் நிறுவனம் நஸ்டத்தில் இயங்க ஆரம்பித்தது. சொந்தமாக வாங்கிய கப்பலை ஆங்கில கப்பல் நிறுவனத்திற்கே விற்ற நிலை அறிந்து வ.உ.சி. மிகவும் வருந்தினார். அவரது உடல்நலம் படிப்படியாக சரிந்தது. இதனால் ஆங்கிலேய அதிகாரிகள் அவரை விடுதலை செய்யும் கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டதால் அவரை விடுவித்தனர். அதனால் 'செக்கிழுத்த செம்மல்' என்ற பெயரும் பெற்றார். இந்திய

விடுதலைக்காகச் சிறையில் சொல்லமுடியாத துயரங்களையும் கொடுமைகளையும் அவமானங்களையும் அனுபவித்தார். சிதம்பரனார் 1912ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

**வ.உ.சி பற்றி மு.வ. எழுதிய பாடல்**

"ஒழுக்கத்தின் உரவோய் நாட்டின்

உரிமைப்போர் நடந்த காலை

எழுச்சியின் தலைமை ஏற்றே

இணையிலாத் தியாகம் செய்தோய்

மொழிப் பற்றும் நாட்டுப் பற்றும்

முற்றிலும் ஒன்றி நிற்க

விழிப் பொறி இரண்டும் போல

விழுப்பமாய்க் கொண்டாய் அய்யா

பாரதி பெற்ற நண்ப

பழியிலா வீர வாழ்க்கை

பாரெல்லாம் ஏத்தும் வண்ணம்

பண்புடன் நடத்தி நின்றோய்

வேருடன் நைந்து வாடி

வெள்ளையர் ஆட்சி வீழ நேரிலாப் போர்கள் செய் தாய்

நித்தமும் நின் பேர் வாழி!"

**வறுமை**

வழக்கறிஞர் உரிமம் அவரிடமிருந்து பறிக்கப்பட்டதால் அவரால் தொடர்ந்து வாதாட முடியவில்லை. சுதேசிக் கப்பல் நிறுவனம் 1911இல் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டதால் ஏழ்மைநிலைக்குத் தள்ளப்பட்டு மனைவி தனது இரண்டு குழந்தைகளுடன் சென்னையில் குடியேறினார்.

அங்கு மண்ணெண்ணெய் வியாபாரத்தைத் தொடங்கினார். ஆனால் அதில் அவரால் வெற்றிபெற முடியவில்லை. அதன்பிறகு சென்னையில் இருந்த பல தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர் நல அமைப்புக்குத் தலைவரானார். பிறகு 1920 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸின் கொல்கத்தா அமர்வில் சேர்ந்தார். அரசியல் வாதியாகவும் வழக்கறிஞராகவும் மட்டும் இல்லாமல் சிறந்த அறிஞர் ஆகவும் விளங்கினார். சிறையில் இருக்கும்போது தனது சுயசரிதையை எழுதத் தொடங்கிய அவர் சிறையில் இருந்து விடுதலை பெற்று அதனை முடித்தார்.

**முடிவுரை**

தூத்துக்குடி என்றாலே நினைவுக்கு வருவது முத்துக்கள்தான். அந்த முத்துநகரில் பெருமைமிகு முத்துகளுள் ஒன்றாக தோன்றி மிளிர்ந்தவர் வ.உ.சி அவர்கள். இந்திய விடுதலைக்காக வாழ்நாள் முழுவதும் போராடிய வ.உ.சி. 1936ம் ஆண்டு இந்த உலக வாழ்வைத் துறந்தார். அவர் மறைந்தாலும் அவர் மக்களுக்குத் தந்த தேசப்பற்றும் சுதேசப்பற்றும் மறையவில்லை . இந்த நன்றி காட்டும் பண்பை, திரையுலக விஞ்ஞானம் இருக்கும் வரை, சிதம்பரம் பிள்ளையின் விடுதலை வீரம் வாழையடி வாழையென கன்றுகளாகப் பலன் வழங்கும் என்பது உறுதி.

“வ.உ.சி.யைப் பாரதி பாடினார். கவிமணி பாடினார், காந்தி போற்றினார் ஆயினும் நன்றிகெட்ட நாடு அஞ்சி அஞ்சி அவரைக் கஞ்சிக்குக் கூட வழியில்லாமல் கண்மூடச் செய்தது. சிலுவையைப் பார்த்தால் இயேசுபிரான் நினைவு வரும் செக்கினைப் பார்த்தால் சிதம்பரனார் நினைவு வரும்”.

**சான்றெண் விளக்கம்:**

1.எஸ்.கண்ணன், வ.உ.சி ஒரு பன்முகப் பார்வை, உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை, ப.98

2.வ.உ.சிதம்பரனார், சுயசரிதை, வ.உ.சி.பதிப்பகம், ப.85

3. வ.உ.சிதம்பரனார், மெய்யறிவு எஸ்.வி.பி.பிரஸ், சென்னை – 1915, ப.77

4. வ.உ.சி., நூல்திரட்டு, புதுமைப்பித்தன் பதிப்பகம்-2002, ப.56